# முயற்சியாண்மைக்கல்வி

**01**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## வணிகத்திட்டம்

## தரம் 11

**மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

(1) "நீர் திட்டமிடுவதில் தோல்வியடைவீராயின் தோல்வியடைவதற்கு நீர் திட்டமிடுபவராவீர்." மேற்கூறிய கூற்றினால் கருதப்படுவது,

I. தோல்வியடைய ஒரு திட்டம் தேவையாகும்.
II. வெற்றி பெற ஒரு திட்டம் தேவையற்றது.
III. வெற்றி பெற ஒரு திட்டம் தேவை.
IV. தோல்வியடைய ஒரு திட்டம் தேவையற்றது.

(2) முயற்சியாளரின் வணிக ஆலோசனையை உண்மையான வியாபாரமாக மாற்றம் செய்து செயற்படுத்த,

I. தூரநோக்கு இருத்தல் வேண்டும்.
II. ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும்.
III. வணிகத் திட்டமிடல் இருக்க வேண்டும்.
IV. அதிக மூலதனம் ஈடுபடுத்தபட வேண்டும்.

(3) திட்டங்கள் எப்போதும்,

I. எதிர்காலத்துடன் தொடர்புபடுகின்றது.
II. கடந்தகாலத் தகவல்களை காட்டுகின்றது.
III. தற்போதைய நிலையை விளக்குகின்றது.
IV. போட்டித் தன்மையை விளக்குகின்றது.

(4) வணிகத் திட்டத்தினால் காட்டப்படுவது?

I. கடந்த காலத் தகவல்.
II. எதிர்பார்த்த தகவல்.
III. தற்போதையத் தகவல்.
IV. மேற் கூறிய எதுவும் இல்லை.

(5) ஒரு வணிகத் திட்டத்தினால் குறிப்பிடப்படுவது,

I. ஒரு வணிகத்தினால் அடைய விரும்பும் எதிர்பார்த்த இலக்கு.
II. வணிகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு செயற்பாடுகள்.
III. புறச்சூழல் தொடர்பான எதிர்வு கூறல்.
IV. ஒரு வணிகத்தினால் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற குறிக்கோள்கள் மற்றும் ஏனைய காரணிகள்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

(6) ஒரு வணிகத் திட்டம்,

I. ஒரு வணிகத்தினால் அடைய விரும்பும் நோக்கங்களைக் குறித்துக் காட்டும் ஆவணம்.
II. ஒரு வணிகம் செயல்படுத்த எதிர்பார்க்கும் பல்வேறு செயற்பாடுகளை காட்டும் ஆவணம்.
III. ஒரு வணிகம் அடைய விரும்பும் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைக் காட்டும் ஆவணம்.
iv. ஒரு வணிகம் பல்வேறு சுற்றுச் சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றியமைக்கின்றது என்பதைக் காட்டும் ஆவணம்.

(7) பாடசாலையில் செயற்படுத்தப்படும் திட்டம் **அல்லாதது**?

I. ஆண்டு கடிதம்.
II. வீட்டுக் கட்டுமானத் திட்டம்.
III. வகுப்புக் காலஅட்டவணை.
IV. ஆசிரியரிகளின் கால அட்டவணை.

(8) வணிகத் திட்டத்தின் கூறுகள்,

I. இரண்டு
II. மூன்று
III. நான்கு
IV. ஐந்து

(9) வணிகத் திட்டத்தின் கூறுகளை மட்டும் உள்ளடக்கிய விடையாவது?

I. சந்தைப்படுத்தல் திட்டம், நிர்வாகத் திட்டம், சந்தைத் திட்டம்.
II. சந்தைப்படுத்தல் திட்டம், சந்தைப் பகுப்பாய்வு, நிர்வாகச் சுருக்கம்.
III. சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தித் திட்டம், நிர்வாகத் திட்டம்,
IV. சந்தைப்படுத்தல் திட்டம், நிர்வாகத் திட்டம், நிதித் திட்டம்.

(10) வணிகத் திட்டத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்று,

I. உற்பத்தித் திட்டம்.
II. சந்தைத் திட்டம்.
III. மொத்த முதலீட்டு மதிப்பீடு.
IV. அலகு விலை.

(11) வணிகத் திட்டத்தின் அடிப்படை அம்சம் **அல்லாதது** எது?

I. நிர்வாகச் சுருக்கம்.
II. உற்பத்தித் திட்டம்.
III. நிர்வாகத் திட்டம்.
IV. சந்தைப் பகுப்பாய்வு.

(12) வணிகத் திட்டத்தின் சுருக்கம் பின்வருமாறு:

I. சந்தைப்படுத்தல் திட்டத்தில்.
II. நிர்வாகச் சுருக்கத்தில்.
III. உற்பத்தித் திட்டத்தில்.
IV. நிதித் திட்டத்தில்.

(13) வணிகத் திட்டமொன்றை பரிசீலிக்கும் நபருக்கு வணிகத்தின் மிக முக்கியமான விடயங்களின் சுருக்கம் காட்டப்படுவது?

I. சந்தைப்படுத்தல் திட்டத்தில்.
II. உற்பத்தித் திட்டத்தில்.
III. நிர்வாகச் சுருக்கத்தில்.
IV. நிதித் திட்டத்தில்.



COMMERCE & BUSINESS STUDIES BRANCH

(14) வணிகத்தைப் பற்றிய படம் ஒன்றை மனதில் நிர்மாணித்துக் கொள்ளும் முகமாக முன்வைக்கப்பட வேண்டியது?

I. நிதித் திட்டம்.
II. உற்பத்தித் திட்டம்.
III. நிர்வாக திட்டம்.
IV. நிறைவேற்று சுருக்கம்.

(15) வணிகத் திட்டதின் அவசியத்தைப் பற்றி சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. வணிகத் திட்டம் வணிகத்திற்கான வழிகாட்டியகும்.
B. வணிகக் கருத்துக்கள் வணிகத் திட்டத்தை விளக்குகிறது.
C. வணிகச் சூழலைப் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ள வணிகத் திட்டம் தேவை.
D. வணிகத்தின் இலாபம் நட்டத்தைத் தீர்மானிக்க வணிகத் திட்டம் தேவை.

மேலே உள்ள கூற்றுக்களில் வணிகத் திட்டத்தின் அவசியத்தை சரியாகக் காட்டும் கூற்றானது,

I. A மற்றும் D
II. C மற்றும் D
III. B,C மற்றும் D
IV. A ,B மற்றும் C

(16) வணிகத் திட்டத்தில் உள்ள தகவல் மற்றும் அந்தத் தகவல்களைக் உள்ளடக்குகின்ற வணிகத் திட்டமிடல் அடிப்படைகள் கீழே உள்ளன.அவற்றுடன் சரியாகப் பொருந்தக் கூடிய பதிலைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 1. வணிகத்திற்குத் தேவையான மனித வளங்கள் | A நிதித் திட்டம் |
| 2. வணிக முதலீட்டு மதிப்பீடு. | B நிர்வாகச் சுருக்கம். |
| 3. வணிகப் பெயர் மற்றும் தொழில் பகுதி. | C சந்தைப்படுத்தல் திட்டம். |
| 4. வணிக விற்பனை எதிர்வுகூறல். | D நிர்வாகத் திட்டம். |

I. 1-A,2-D,3-B,4-C
II. 1-D,2-A,3-B,4-C
III. 1-B,2-C,3-D,4-A
IV. 1-D,2-A,3-C,4-B

(17) நிர்வாகச் சுருக்கத்தில் உள்ளடங்குகின்ற தகவல் **அல்லாதது**?

I. வணிகத்தின் சிறப்புத் தன்மை.
II. வணிகத்தின் பெயர்.
III. கடந்த ஆண்டு விற்பனை வருமானம்.
IV. தொழில் துறை ஆகும்.

(18) நிர்வாகச் சுருக்கத்தில் உள்ளடங்குகின்ற தகவல்களில் ஒன்று,

I. வணிகத்தின் பெயர்.
II. சந்தைப்படுத்தல் திட்டம்.
III. உற்பத்தித் திட்டம்.
IV. நிர்வாகத் திட்டம்.

COMMERCE & BUSINEESS STUDIES BRANCH

(19) சந்தைப்படுத்த எதிர்பார்க்கப்படும் உற்பத்திகள் அதற்கான கேள்வி எதிர்வு கூறலினால் காட்டப்படுவது?

I. நிர்வாகச் சுருக்கத்தில்.
II. நிதித் திட்டத்தில்.
III. சந்தைப்படுத்தல் திட்டத்தில்.
IV. உற்பத்தித் திட்டத்தில்.

(20) ஒரு உற்பத்தித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற தகவல்,

I. விற்பனை எதிர்வு கூறல்
II. மொத்த முதலீட்டு மதிப்பீடு.
III. சந்தைப் பகுப்பாய்வு.
IV. அலகு விலை.

(21) வணிகத்திற்குத் தேவையான மனித வளங்கள் பற்றிய தகவல்கள் அடங்குவது?

I. நிதித் திட்டத்தில்.
II. சந்தைப்படுத்தல் திட்டத்தில்.
III. நிர்வாகத் திட்டத்தில்.
IV. உற்பத்தித் திட்டத்தில்.

(22) நிதித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற தகவல் **அல்லாதது**

I. எதிர்பார்த்த பணவரவு.
II. உற்பத்திச் செலவு.
III. முதலீட்டு மதிப்பீடு
IV. எதிர்பார்த்த பணச் செலவு.

(23) வணிகத்திற்கான திட்டத்தில் தேவையாக காட்டப்படுவது?

I. நிதி திரட்டுவது பற்றி.
II. இலாபத்தை அதிகரிப்பது பற்றி.
III. வாடிக்கையாளரை திருப்திபடுத்துவது பற்றி.
IV. வணிகத்தின் நற்பெயரை அபிவிருத்தி செய்வது பற்றி.

(24) வணிகத் திட்டத்தின் தேவையாக கருதப்படாதது?

I. வணிகக் கருத்துக்களை விளக்குவதற்கு
II. வணிகத்தை வழி நடத்துவதற்கு
III. வணிகத்தின் இலாபம் நட்டத்தைத் தீர்மானிப்பதற்கு
IV. வணிகத்தின் எதிர்கால நிலைமையை சுட்டிக்காட்டுவதற்கு

(25) வணிகம் ஒன்றுக்கு திட்டம் ஒன்று இல்லாதிருப்பின் குறித்த வணிகம் முகம்கொடுக்கும் ஒரு பிரச்சினை,

I. வணிகக் கருத்துக்களை விளக்குவதற்கு.
II. சந்தைத் தொடர்பாக மதிப்பிடுதல்.
III. தேவையான வளங்களை அடையாளம் காணுதல்.
IV. நிதி வழங்குவதில் தடை ஏற்படுதல்.

COMMERCE & BUSINEESS STUDIES BRANCH

**2)** பின்வரும் உருப்படிகள் வணிகத் திட்டதிதின் எந்தக் கூறுகளைச் சேர்ந்தவை என்பதைக் குறிப்பிடவும்.

1. வணிகப் பெயர்……………………………………………………………………..
2. இலக்கு வாடிக்கையாளர்கள்……………………………………………………
3. உற்பத்திச் செயன்முறை………………………………………………………
4. வணிக முடிவுகளைக் கணக்கிடுதல்……………………………………………..
5. ஊழியர்களின் சம்பளம் மற்றும் கூலி…………………………………………
6. மூலப்பொருள் செலவு மற்றும் கூலிக்கிரயம்……………………………………
7. வணிகத்தின் தனித்துவம்………………………………………………………
8. சந்தைப் பகுப்பாய்வு……………………………………………………………
9. மொத்த முதலீட்டை மதிப்பிடல் …………………………………………………..
10. வியாபாரத்திலுள்ள பணத்தின் அளவு. ……………………………………………..

3) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

1. எந்தவொரு இலக்கையும் அடைய ஒரு திட்டம் தேவை. ( )
2. வணிகச் சூழலைக் கருத்தில் கொண்டு திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். ( )
3. ஒரு திட்டத்துடன் தொடங்கும் ஒவ்வொரு வணிகமும் வெற்றிகரமாக இருக்கும். ( )
4. அதிக பணத்தை முதலீடு செய்தால் மட்டுமே வணிகம் வெற்றி பெறும். ( )
5. வணிகத்தின் நோக்கங்கள் அடையப்படாவிட்டால், அதற்குப் பயன்படுத்தப்படும் வளங்கள் வீணாகிவிடும். ( )
6. வீட்டுத் திட்டம் என்பது பாடசாலையில் காணக்கூடிய திட்டத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ( )
7. வருங்கால ஊழியர்களைப் பற்றிய தகவல் நிர்வாகத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ( )
8. வணிக நிதி பற்றிய தகவல் உற்பத்தி திட்டத்தில் உள்ளடங்குகிறது. ( )
9. ஒரு வணிகம் விற்பனை செய்ய விரும்பும் பொருட்கள் அல்லது சேவைகள் நிதித் திட்டத்தில் அடங்கும் ( )
10. வணிகத் திட்டம் தொடர்பான சுருக்கம் நிர்வாகச் சுருக்கத்தில் காட்டப்பட்டுள்ளது ( )

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**4)** கீழே உள்ள வெற்றிடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக..

1. வணிகச் செயற்பாட்டிற்கான திட்டங்களை தயாரிப்பது………………. முதன்மையான செயற்பாடாகும்

2. எந்த இலக்கையும் அடைய………………. இருப்பது அவசியம்.

3. அடைய வேண்டிய வணிகத்தின் நோக்கங்கள் மற்றும் அதற்காக செயற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் பல்வேறு செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முறையாக தயாிக்கப்பட்ட ஆவணம்…………………………… உள்ளது.

4. வணிகத் திட்டத்தின் பொழிப்பு …………………… ஆகும்.

5. வணிகத்தின் தனித்துவம், தொழில் துறை போன்றவை ……………….ல் கூறப்பட்டுள்ளன.

6.சந்தைப்படுத்த எதிர்பார்க்கும் உற்பத்திகள், அதற்கான கேள்வி, சந்தைப்படுத்தல் உத்திகள் உள்ளடங்குவது……………………. ல் ஆகும்.

7. பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்கான செலவை மதிப்பிடும் ஆவணம்……………………… திட்டம்.

8. வணிகத்திற்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் அதற்கான செலவு ஆகியவை……………….திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

9.வணிக நிதி மற்றும் அவற்றை பெற்றுக்கொள்கின்ற முறை…………….திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

10. வணிகச் சூழலைப் தெளிவைப் பெற ………………… தேவை.

(திட்டம், நிர்வாகச் சுருக்கம், சந்தைப்படுத்தல் திட்டம், நிர்வாகம், திட்டம், முயற்சியாளர், வணிகத் திட்டம், நிர்வாகச் சுருக்கம், உற்பத்திகள், நிதி)

**5)** பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. ஒரு வியாபாரத்தை ஆரம்பித்து நடாத்துவதில் முயற்சியாளரின் முதன்மைக் கருமத்தைப் பெயரிடுக.

2. வணிகச் சூழலைக் கருத்தில் கொண்டு வணிகத் திட்டங்களை ஏன் தயாரிக்க வேண்டும்?

3. வணிகத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய இரண்டு அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுக.

4. வணிகமொன்றிற்கு வணிகத் திட்டம் தேவை என்பதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

5. ஒரு முயற்சியாளருக்கு வணிகத் திட்டம் தேவைப்படும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

6. வணிகத் திட்டம் இல்லாததால் ஒரு முயற்சியாளர் முகம்கொடுக்கும் நான்கு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

7. வணிகத் திட்டம் என்றால் என்ன?

8. வணிகத் திட்டத்தின் கலவையைக் குறிப்பிடுக.

9. வணிகத் திட்டத்தில் உள்ள அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

10. நிறைவேற்றுச் சுருக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

11. நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

12. சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

13. ஒரு உற்பத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

14. நிர்வாகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

15. நிதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

16. நிதி திரட்ட வணிகத் திட்டத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

17. ‘‘நீர் திட்டமிடுவதில் தோல்வியடைவீராயின் தோல்வியடைவதற்கு நீர் திட்டமிடுபவராவீர்.’’ மேலே உள்ள கூற்று எதைக் குறிக்கின்றது?

18. ஒரு பாடசாலையில் இடம்பெறும் திட்டங்களுக்கு இரண்டு உதாரணங்களைத் தருக.

COMMERCE & BUSINEESS STUDIES BRANCH